**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்**

**2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ம் நாள் செவ்வாய்கிழமை**

O.S.73/2022

வாதி தரப்பு சாட்சியாகிய PW1-ன் வாக்குமூலம் (1969 -ம் ஆண்டின் 44 -வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. S. முஹம்மது பாசில், M.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரபு | தாலுக்கா | : | திருவாரூர் |
| த/பெ | : | அருள்சிங் | கிராமம் | : | பெருந்தரக்குடி |
| ஜாதி | : | | தொழில் | : | வாதி நிறுவன தொழிற்சாலை பங்குதாரர் |
| சமயம் | : | | வயது | : | 41/25 |

**முதல் விசாரணை**

1. நான் வழக்கில் தனிப்பட்ட முறையில் தரப்பினர் அல்ல. வாதி நிறுவனத்தின் பங்குதாரர் ஆவேன். வழக்கு தாக்கல் செய்த காலத்தில் ரமேஷ்பாபு என்பவர் Diamond silicate நிறுவனத்தின் Managing Partner ஆக இருந்தார். அவர் மூலம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. தற்போது Sleeping Partner ஆக உள்ளார். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டதாகும். அதில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

2. கடந்த 27.07.2020-ம் தேதியில் எங்களது நிறுவனமான Diamond silicate பெயரில் தாவா சொத்தினை கிரயம் பெற்றதற்கான திருவாரூர் சார்பதிவக **கிரய ஆவண எண்.1656/2000-ன் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1** ஆகவும், கடந்த 12.10.2022 தேதியில்

பதிவிறக்கம் செய்யப்பட்ட தாவா சொத்திற்கான **பட்டா கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.2** ஆகவும், எங்களது Diamond silicate நிறுவனம் பதிவு செய்யப்பட்டதற்கான கடந்த 30.08.2005 தேதிய நிறுமம் பதிவின் **நோட்டரி சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3** ஆகவும், கடந்த 28.11.2014 தேதிய Partnership Deed **நோட்டரி சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4** ஆகவும், கடந்த 05.10.2022 தேதியில் வாதி மற்றும் 1 முதல் 9 பிரதிவாதிகளுக்கு 11-ம் பிரதிவாதி கொரடாச்சேரி காவல் ஆய்வாளர் **அனுப்பிய அழைப்பாணை - சார்வு நகல் வா.சா.ஆ.5** ஆகவும், 1 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் வாதி நிறுவனத்திற்கு எதிராக 21.09.2021 தேதியன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது தொடர்பாக பிரசுகரிக்கப்பட்ட பொது **விளம்பர அறிவிப்பு - பிரதி நகல் வா.சா.ஆ.6** ஆகவும், 1 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் வாதி நிறுவனத்திற்கு எதிராக 10.10.2022 தேதியில் சாலை மறியல் போராட்டம் நடத்துவதற்காக வெளியிடப்பட்ட **பொதுவிளம்பர அறிவிப்பு - பிரதி நகல் வா.சா.ஆ.7** ஆகவும், கடந்த 09.10.2022 தேதியில் எங்கள் நிறுவனத்தின் மேலாளர் 11ம் பிரதிவாதிக்கு பாதுகாப்பு வழங்க வேண்டி அனுப்பிய **கடிதத்தின் அலுவலக நகல் வா.சா.ஆ.8** ஆகவும், கடந்த 16.02.2006 தேதியில் மாவட்ட தொழில் மையம் வழங்கிய நிரந்தர பதிவு சான்றிதழின் **நோட்டரி சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9** ஆகவும், கடந்த 18.06.2020 தேதியில் தஞ்சாவூர் தொழில்துறை பாதுகாப்பு மற்றும் சுகாதார துறையின் இணை இயக்குநர் வழங்கிய பதிவுச்சான்றிதழின் **நோட்டரி சான்றிட்ட நகல் வா.சா.ஆ-10** ஆகவும், 05.07.2018, 05.07.2017, 05.07.2019 ஆகிய தேதிகளில் 2017 முதல் 2018 வரையிலான காலத்திற்கு தொழிற்சாலை ஆணையர் வழங்கிய **ஆய்வு சான்று - நோட்டரி நகல் வா.சா.ஆ.11**

ஆகவும், கடந்த 30.01.2020 தேதியில் தொழிற்சாலை இணை இயக்குநர் வழங்கிய பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திற்கான Form 4 சான்றிதழின் **நோட்டரி - சான்றிட்ட நகல் வா.சா.ஆ.12** ஆகவும், 18.09.2018 தேதியில் Diamond silicate நிறுவனத்தின் தொழில் கூட்டு பதிவு அறிவிப்பு மற்றும் தொகை செலுத்திய ரசீதுக்கான **நோட்டரி சான்றிட்ட நகல் வா.சா.ஆ.13** ஆகவும், கடந்த 27.07.2020-ம் தேதியில் எங்களது நிறுவனமான Diamond silicate பெயரில் தாவா சொத்தினை கிரயம் பெற்றதற்கான திருவாரூர் சார்பதிவக **கிரய ஆவண எண்.1657/2000-ன் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.14** ஆகவும் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.//

//கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.07.29 17:41:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவாரூர்.